### 3 புதிய சட்டங்கள் அமலுக்கு வந்தது

# தமிழகம் முழுவதும் வக்கீல்கள் போராட்டம்

## நீதிமன்ற புறக்கணிப்பு; உண்ணாவிரதம்



ஒன்றிய அரசு நேற்று அமல்படுத்திய 3 புதிய குற்றவியல் சட்டங்களை திரும்ப பெறக் கோரி, மதுரையில் நேற்று வக்கீல்கள் உண்ணாவிரத போராட்டம் நடத்தினர்.

**சென்னை, ஜூலை 2:** நாடு முழுவதும் 3 புதிய குற்றவியல் சட்டங்கள் நேற்று முதல் அமலுக்கு வந்தன. இதை எதிர்த்து தமிழகம் முழுவதும் வக்கீல்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

ஒன்றிய அரசு நேற்று அமலுக்கு கொண்டு வந்த 3 குற்றவியல் சட்டங்களில் முக்கிய அம்சங்களாக, இனி காவல் நிலையத்துக்கு சென்றுதான் புகார் தர வேண்டும் என்பது இல்லை. மின்னணு தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாகவே புகார் தர முடியும். எந்த காவல் நிலையத்திலும் எப்ஐஆர் பதிவு செய்யலாம். குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய கால அவகாசம் 90 நாட்கள். விசாரணையை முடிக்க வேண்டிய நாட்கள் 180. விசாரணை முடிந்த 30 நாட்களில் தீர்ப்பு வழங்க வேண்டும். சிறுமிகளை பாலியல் பலாத்காரம் செய்தால் தூக்கு தண்டனை விதிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசு கொண்டு வந்த 3 புதிய சட்டத்தை நிறுத்தி வைக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதேபோல பல்வேறு மாநில முதல்வர்கள், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்களும் இதே கோரிக்கையை வலியுறுத்தியிருந்தனர். இந்நிலையில் இந்தச் சட்டம் நேற்று உடனடியாக அமலுக்கு வந்தது. இதை எதிர்த்து தமிழகம் முழுவதும் வக்கீல்கள் நேற்று முதல் காலவரையற்ற நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அதில் மதுரை, நெல்லை, நாகர்கோவில், கோவை, திருச்சி, சேலம் உள்ளிட்ட நகரங்களில் வக்கீல்கள் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டனர். மதுரை, நெல்லையில் உண்ணாவிரதம் இருந்த வக்கீல்கள் முன் பாஜ வக்கீல்கள் புதிய சட்டத்துக்கு ஆதரவாக கோஷம் எழுப்பியதுடன், இனிப்பு வழங்கியதால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

குமரி மாவட்டத்தில் நீதிமன்றத்தை புறக்கணித்த வக்கீல்கள், 4 இடங்களில் உண்ணாவிரத போராட்டமும் நடத்தினர். கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் புதுச்சேரியில் நேற்று வழக்கறிஞர்கள் நேற்று ஒரு நாள் நீதிமன்றத்தை புறக்கணித்து போராட்டம் நடத்தினர்.

பல ஊர்களில் ஒரு வாரம் வரை நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர். சென்னையில் நேற்று பிற்பகலில் வக்கீல்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழகத்தில் இந்தச் சட்டத்துக்கு எதிராக போராட்டங்கள் தீவிரமாகியுள்ளதால் நீதிமன்ற வளாகங்களில் பரபரப்பு நிலவியது. இதனால் வழக்குகள் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

### கன்னியாகுமரி போலீசில் முதல் வழக்கு பதிவு

புதிய சட்டத்தின்படி நேற்று மாலை வரை குமரி மாவட்டத்தில் ஆறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதில் முதல் வழக்கு நேற்று அதிகாலை 12.15க்கு கன்னியாகுமரி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

ரேஸ் டிரைவிங் (அதி வேகமாக வாகனம் இயக்குதல்) பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. பி.என்.எஸ். 281 மற்றும் மோட்டார் வாகன சட்டம் 181(3), 185 ஆகிய பிரிவுகளின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி காவல் நிலையத்தில்தான் புதிய சட்டத்திட்டத்தின் கீழ் முதல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# பாஜ பிரமுகருக்கு முன்ஜாமீன் வழங்க நடிகை கவுதமி எதிர்ப்பு



**மதுரை, ஜூலை 2:** நடிகை கவுதமிக்கு ராமநாதபுரம் மாவட்டத்தில் நிலம் வாங்கி தருவதாக கூறி பாஜ பிரமுகர் அழகப்பன், ரூ.3 கோடி வரை வாங்கியுள்ளார். முதுகுளத்தூர் பகுதியில் உள்ள ஒரு கிராமத்தில் ரூ.57 லட்சத்திற்கு 64 ஏக்கர் நிலத்தை வாங்கி கொடுத்தார். ஆனால், இந்த நிலத்தை விற்பனை செய்ய செபி தடை செய்துள்ளதை மறைத்து மோசடியாக விற்றுள்ளார். இது தொடர்பாக நடிகை கவுதமி அளித்த புகாரின்பேரில், ராமநாதபுரம் குற்றபிரிவு போலீசார் அழகப்பன் உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிந்துள்ளனர். இதில் முன்ஜாமீன் கோரி அழகப்பன் மனு செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி நக்கீரன் முன் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நடிகை கவுதமி தரப்பில் அழகப்பனுக்கு முன்ஜாமீன் வழங்கக் கூடாது என்று வாதிடப்பட்டது. பின்னர் விசாரணையை 4ம் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.


தமிழ்நாடு அரசு

**தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை**

தனி மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம் (நி.எ), சிப்காட் மாநெல்லூர் (Phase–III)

ந.க.எண். 01/2024/அ1/த.மா.வ.அ/திருவள்ளூர் நாள் : 27.06.2024

**பொது அறிவிப்பு**

தமிழ்நாடு தொழில் துறை பொது அறிவிப்பு ந.க.எண். 01/2024/அ1/த.மா.வ.அ/ திருவள்ளூர், நாள்:31.01.2024–ன் படி திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், எண்.47.மேல்மாளிகைப்பட்டு கிராமத்தில் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997 (தமிழ்நாடு சட்டம் 10/1999) பிரிவு 3(2) ஆம் பிரிவின் கீழ் தினகரன் நாளிதழ் வெளியிடப்பட்ட நாள் : 09.02.2024–ல் பொது அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டதிற்கான பிழை திருத்தம்.

விவர அட்டவணை

அலகு –2 பிளாக் – 1

மாவட்டம்: திருவள்ளூர் வட்டம் : ஊத்துக்கோட்டை கிராமம் : 47. மேல்மாளிகைப்பட்டு

| ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டது | | | | திருத்தி படிக்கப்பட வேண்டியது | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3(2) அறிவிக்கை வ.எண் | புல எண் | நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள கட்டுமானங்களின் விவரம் | நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள மரங்கள் / பயிர்களின் விவரம் | 3(2) அறிவிக்கை வ.எண் | புல எண் | நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள கட்டுமானங்களின் விவரம் | நில எடுப்பு செய்யும் புலத்தில் உள்ள மரங்கள் / பயிர்களின் விவரம் |
| 1. | 54/1A1 | காலியிடம் | – | 1 | 54/1A1 | பைப்லைன் | மல்லிச் செடி–460, கனகாம்பரம் செடி–220. |
| 3. | 54/1A3 | – | மல்லிச் செடி –320 | 3 | 54/1A3 | காலியிடம் | – |
| 4. | 54/1A4 | – | மல்லிச்செடி –260, தேக்குமரம்–8. | 4 | 54/1A4 | பைப்லைன் | மல்லிச்செடி–1288, பனைமரம்–1. |
| 5. | 54/1B | – | மல்லிச்செடி–450 | 5 | 54/1B | பைப்லைன் | மல்லிச்செடி–674, தேக்குமரம்–8, வேப்ப மரம்–1. |
| 6. | 54/1C | – | காட்டுவா மரம் –1, பனைமரம் –1, வேப்பமரம் –1. | 6 | 54/1C | பைப்லைன் | காட்டுவா மரம்–1, பனைமரம்–1, வேப்பமரம்–1. |
| 7. | 54/1D | வட்ட செங்கல் கிணறு –1, மின் மோட்டார்–1, மின் கம்பம் –2, ஆழ்துளை கிணறு–2. | மல்லிச்செடி–330, ரோஜா செடி–280, தென்னை மரம்–5, வேப்பமரம்–1, வேப்பஞ்செடி–3, மாமரம்–1, தேக்கு மரம்–3. | 7 | 54/1D | வட்ட செங்கல் கிணறு –1, மின் மோட்டார்–1, மின் கம்பம் –2, ஆழ்துளை கிணறு–2, பைப்லைன். | மல்லிச்செடி–580, ரோஜா செடி–850, தென்னை மரம்–5, வேப்பமரம்–1, வேப்பஞ்செடி–3, மாமரம்–1, தேக்கு மரம் –3. |
| 8. | 54/1E1 | காலியிடம் | – | 8 | 54/1E1 | பைப்லைன் | – |
| 9. | 54/1E2 | காலியிடம் | – | 9 | 54/1E2 | பைப்லைன் | – |
| 10. | 54/2 | காலியிடம் | – | 10 | 54/2 | பைப்லைன் | – |
| 11. | 56/1A1 | மின் கம்பம் –2, கம்பி வேலியுடன் கூடிய பி.வி.சி கான்கிரீட் பைப் தூண்கள் –14, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல் தூண்கள் –3. | மல்லிச்செடி–300, பனைமரம் –23. | 11 | 56/1A1 | மின் கம்பம்–2, கம்பி வேலியுடன் கூடிய பி.வி.சி கான்கிரீட் பைப் தூண்கள்–14, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல் தூண்கள் –3. | மல்லிச்செடி–377, பனைமரம் –23. |
| 12. | 56/1A2 | – | தென்னை மரம் –2, வேப்பமரம் –1. | 12 | 56/1A2 | பைப்லைன் | தென்னை மரம்–1, வேப்பமரம் –1. |
| 15. | 56/3 | – | பனைமரம்–10, பனைஞ்செடி–6, வேப்பமரம்–9, வேப்பஞ்செடி–4, காட்டுவா மரம்–1. | 15 | 56/3 | பைப்லைன் | பனைமரம்–10, பனைஞ்செடி–6, வேப்பமரம்–9, வேப்பஞ்செடி–4, காட்டுவா மரம்–1. |
| 16. | 56/4 | – | மல்லிச்செடி–240, காட்டுவா மரம்–10, வேப்ப மரம்–8, வேப்பஞ்செடி–10, பனைமரம்–1, பனைஞ்செடி–4, நுணா மரம்–2. | 16 | 56/4 | பைப்லைன் | மல்லிச்செடி–327, காட்டுவா மரம்–10, வேப்ப மரம்–8, வேப்பஞ்செடி–10, பனைமரம்–1, பனைஞ்செடி–4, நுணா மரம்–2. |
| 18. | 56/5B | காலியிடம் | – | 18 | 56/5B | பைப்லைன் | காட்டுவா மரம்–3, காட்டுவாச்செடி–3, கொடுக்காபுளி செடி–1, பனைமரம்–2, பனைஞ்செடி–5, நுணா மரம்–2, வேப்பமரம்–2, வேப்பஞ்செடி–6. |
| 19. | 57/1 | சிமெண்ட் பைப்–16, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல்–5 | தென்னைமரம்–4 | 19 | 57/1 | சிமெண்ட் பைப்–16, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல்–5, ஆழ்துளை கிணறு–1, சிறிய அளவில் மோட்டார் அறை–1, பைப்லைன். | தென்னை மரம்–3, எலுமிச்சை செடி –1. |
| 21. | 57/2B | சிமெண்ட் பைப்–20, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல் –9 | வேப்பஞ்செடி –1 | 21 | 57/2B | சிமெண்ட் பைப்–27, கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல்–9, பைப்லைன். | வேப்பஞ்செடி–3, தகரச் செடி–4. |
| 61. | 57/10A | காலியிடம் | – | 61 | 57/10A | கம்பி வேலியுடன் கூடிய வெள்ளைக்கல்–2 | – |
| 63. | 59/1A | ஆழ்துளை கிணறு–1 | நெல்லிச்செடி–1, கொய்யாச்செடி–1, மாதுளைச்செடி–1, மல்லிச்செடி –210, வாழைக்கன்று–35, வேர்க்கடலை. | 63 | 59/1A | – | நெல்லிச்செடி–1, கொய்யாச்செடி–1, மாதுளைச்செடி–1, மல்லிச்செடி–210, வாழைக்கன்று–35, மூங்கில் மரம்–1, முருங்கைச்செடி–1, காட்டுவா மரம்–1, காட்டுவாச்செடி–2. |
| 65. | 59/2 | வட்ட செங்கல் கிணறு –1 | வேர்கடலை | 65 | 59/2 | வட்ட செங்கல் கிணறு–1, ஆழ்துளை கிணறு–1. | பனைமரம்–6, பனைஞ்செடி–5, தேக்குமரம்–7, வேப்ப மரம்–1, வேப்பஞ்செடி–2, காட்டுவா மரம் –1, காட்டுவாச்செடி–3. |
| 66. | 60/1 | – | முல்லைச் செடி–180, தேக்கு மரம்–6, வேப்பமரம்–2, கொய்யா மரம்–1, எலுமிச்சை மரம்–1. | 66 | 60/1 | வட்ட செங்கல் கிணறு–1, மின் மோட்டார்–1. | முல்லைச் செடி–350, தேக்குமரம்–6, வேப்ப மரம் –2, கொய்யா மரம் –2, எலுமிச்சை செடி–3, முருங்கைச் செடி–1, பனைமரம்–1. |
| 68. | 60/3 | காலியிடம் | – | 68 | 60/3 | பைப்லைன் | – |
| 69. | 61 | – | வேப்பஞ்செடி–5, பனைமரம் –2. | 69 | 61 | ஆழ்துளை கிணறு–1, பைப்லைன். | வேப்பஞ்செடி–5, பனைமரம் –2. |
| 70. | 62/1 | மின் இணைப்பு பெட்டி–1, ஆழ்துளை கிணறு–1. | – | 70 | 62/1 | மின் இணைப்பு பெட்டி–1, ஆழ்துளை கிணறு–1, பைப்லைன். | – |

| ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டது. | | | | திருத்தி படிக்கப்பட வேண்டியது | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3(2) அறிவிக்கை வ.எண் | புல எண் | மொத்த பரப்பு (ஹெக்டேர்) | நில எடுப்பு செய்யப்பட உள்ள பரப்பு (ஹெக்டேர்) | 3(2) அறிவிக்கை வ.எண் | புல எண் | மொத்த பரப்பு (ஹெக்டேர்) | நில எடுப்பு செய்யப்பட உள்ள பரப்பு (ஹெக்டேர்) |
| 71. | 62/2A1A1A1 | 0.44.46 | 0.32.85 | 71 | 62/2A1A1A1 | 0.44.46 | 0.44.46 |
| மொத்தம் | | 14.43.00 | 14.17.80 | மொத்தம் | | 14.43.00 | 14.29.41 |

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நி.எ),
சிப்காட் மாநெல்லூர் (Phase–III),
திருவள்ளூர் மாவட்டம்.

செமதொஇ/ 165 /நிலம் கையகம்/2024


### இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம்

# மீனவர்கள் 25 பேர் சிறைபிடிப்பு

**4 நாட்டுப்படகுகளும் பறிமுதல்**

**ராமேஸ்வரம், ஜூலை 2:** ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் மற்றும் பாம்பன் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் 400க்கும் மேற்பட்ட நாட்டுப்படகில், 2,500க்கும் அதிகமான மீனவர்கள் பாக்ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடல் பகுதிக்கு மீன்பிடிக்க சென்றனர். இரவில் மீன் பிடித்து கொண்டிருந்தபோது, ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களை விரட்டியடித்து சிறை பிடித்தனர். இதில் பாம்பன், தங்கச்சிமடம், நம்புதாளை பகுதியை சேர்ந்த நான்கு நாட்டுப்படகுகளையும் அதிலிருந்து 25 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், படகுகளையும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றனர். இலங்கை கடற்படையின் தீவிர ரோந்தால் மற்ற நாட்டுப்படகு மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் நஷ்டத்துடன் கரை திரும்பினர்.

நாட்டுப்படகு மீனவர்களை கைது செய்த சம்பவம் அனைத்து மீனவர்கள் மத்தியிலும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

**பெண்கள் கண்ணீருடன் மறியல்:** இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட 25 மீனவர்கள், 4 நாட்டுப்படகுகளை விடுவிக்க கோரி நேற்று நாட்டுப்படகு மீனவர்கள், பாம்பன் கடலில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் பேரணியாக சென்று பேருந்து நிறுத்தம் முன்பு தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். இதில் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களின் மனைவி, குழந்தைகள் மற்றும் உறவினர்கள் பங்கேற்று அவர்களை உடனே விடுதலை செய்யக்கோரி கொளுத்தும் வெயிலில் கதறி அழுதனர். பள்ளி செல்ல வேண்டிய குழந்தைகளும் அழுதபடி தாயுடன் போராட்டத்திற்கு வந்தனர். அதிகாரிகள் வந்து அவர்களை சமாதானம் செய்து அனுப்பினர்.

மீன்பிடி தடைக்காலம் முடிந்து 15 நாளே ஆன நிலையில் ஏற்கனவே இலங்கை கடற்படை 36 மீனவர்களையும், 5 விசைப் படகையும் சிறை பிடித்தது. நேற்று மேலும் 25 மீனவர்களையும், 4 நாட்டுப்படகையும் சிறை பிடித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### புதுச்சேரியில் கூட்டணி முறிகிறதா?

# அதிருப்தி பாஜ எம்எல்ஏக்கள் 8 பேர் திடீர் டெல்லி பயணம்

**புதுச்சேரி, ஜூலை 2:** புதுச்சேரியில் தேஜ கூட்டணியில் சலசலப்பு நிலவிவரும் நிலையில் பாஜ அதிருப்தி எம்எல்ஏக்கள் 8 பேர் திடீரென டெல்லி புறப்பட்டு சென்றுள்ளனர்.

புதுச்சேரியில் நாடாளுமன்ற தேர்தலில் பாஜ வேட்பாளர் நமச்சிவாயம் தோல்வியடைந்ததால் தேஜ கூட்டணிக்குள் புகைச்சல் கிளம்பி உள்ளது.

இதனிடையே பாஜ மற்றும் ஆதரவு சுயேச்சை எம்எல்ஏக்கள் 7 பேர் சில தினங்களுக்கு முன்பு கவர்னர் சிபி ராதாகிருஷ்ணனை சந்தித்து முதல்வர் ரங்கசாமி தலைமையிலான அரசின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததோடு, பாஜ அமைச்சர்களை நீக்க வலியுறுத்தினர். சுயேச்சை எம்எல்ஏ அங்காளன் பேசிய ஆடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்நிலையில் கல்யாணசுந்தரம் (காலாப்பட்டு), ஜான்குமார் (காமராஜர் நகர்), விவிலியன் ரிச்சர்ட் (நெல்லித்தோப்பு), பாஜக ஆதரவு சுயேச்சைகள் அங்காளன் (திருபுவனை), சிவசங்கர் (உழவர்கரை), கொல்லப்பள்ளி ஸ்ரீனிவாஸ் அசோக் (ஏனாம்), நியமன எம்எல்ஏ வெங்கடேசன் ஆகிய 8 பேர் நேற்று இரவு திடீரென டெல்லி சென்றுள்ளனர்.

அவர்கள் 2, 3 நாள் அங்கு தங்கி பாஜ தேசிய தலைவர் ஜேபி நட்டா, அமித்ஷா ஆகியோரை சந்திக்க திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையே புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை, மாநில பாஜ தலைவரும், ராஜ்யசபா எம்பியுமான செல்வகணபதி மற்றும் சபாநாயகர் செல்வம் ஆகியோர் நேற்று மதியம் அவரது அறையில் தனியாக சந்தித்து 1 மணி நேரம் பேசி உள்ளனர்.

அதிருப்தி எம்எல்ஏக்கள் டெல்லி பயணம் குறித்து முதல்வருடன் விவாதித்த 2 பேரும், இப்பிரச்னைக்கு சுமூகமாக தீர்வு காண ஆலோசனை நடத்தியதாக கூறப்படுகிறது. இது புதுச்சேரி அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## ₹20 ஆயிரம் லஞ்சம் துணை தாசில்தார், விஏஓ அதிரடி கைது

**பெரம்பலூர், ஜூலை 2:** பெரம்பலூர் புதிய பஸ் நிலையம் அருகில் புதிதாக திருமண மஹால் கட்டப்பட்டுள்ளது. இந்த திருமண மண்டபத்திற்கு தடையின்மை சான்று பெறுவதற்காக மண்டப மேலாளரான துரைராஜ் என்பவர் பெரம்பலூர் தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். இதற்கு துணைத் தாசில்தார் பழனியப்பன் ₹20 ஆயிரத்தை லஞ்சம் கேட்டுள்ளார். இதுகுறித்து துரைராஜ், பெரம்பலூர் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை போலீசில் புகார் செய்தார். அவர்கள் ஆலோசனையின்படி நேற்று மாலை பெரம்பலூர் தாலுக்கா அலுவலகத்திற்கு சென்ற துரைராஜ், அங்கிருந்த துணைதாசில்தார் பழனியப்பன், விஏஓ நல்லுசாமியிடம் ₹20 ஆயிரம் லஞ்ச பணத்தை கொடுத்துள்ளார். அப்போது அங்கு மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு போலீசார் கைது செய்தனர். உடனே நெஞ்சு வலிக்கிறது என கூறிய தாசில்தாருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### விஷ சாராய வழக்கில் கைது

# 11 பேரை சிபிசிஐடி 3 நாள் காவலில் விசாரிக்க அனுமதி

**கள்ளக்குறிச்சி, ஜூலை 2:** கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் குடித்து 65 பேர் பேர் பலியான வழக்கில் கைதான 11 பேரை 5 நாள் காவலில் விசாரிக்க அனுமதி கோரி, விழுப்புரம் சிபிசிஐடி போலீசார் கள்ளக்குறிச்சி தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் மனு செய்தனர். அப்போது, கண்ணுக்குட்டி (எ) கோவிந்தராஜ், அவரது மனைவி விஜயா உட்பட 11 பேரும் ஆஜர்படுத்தப்பட்டனர்.

மனுவை விசாரித்த நீதிபதி ஸ்ரீராம், 11 பேரையும் 3 நாள் காவலில் விசாரிக்க அனுமதி அளித்து, 3ம்தேதி (நாளை) மாலை 3 மணியளவில் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உத்தரவிட்டார். அதனை தொடர்ந்து 11 பேரையும் சிபிசிஐடி போலீசார் அழைத்து சென்று விசாரித்து வருகின்றனர்.


**pnb Housing Finance Limited** Ghar Ki Baat

**பிற்சேர்க்கை–IV–A–அசையாச் சொத்து/கள் மின்–ஏலம்–பொது விற்பனை அறிவிப்பு**

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு.

பதிவு அலுவலகம்: 9வது தளம், அந்தரிக்ஷ பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி–110 001 தொலைபேசி: 23705414 ,23357172 ,23357171–011, இணையதளம்: www.pnbhousing.com

கிளை அலுவலகம்: 3வது தளம், 104/1, முத்துலிங்க ரெட்டி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை–600045| கிளை அலுவலகம்: வைகை பில்டிங், 2வது தளம், செக்டார் 1, அம்பத்தூர் தொழிற்பேட்டை, 2வது மெயின்ரோடு, சென்னை–600058| கிளை அலுவலகம்: மாடல் எண்.111, முதல் தளம், சிட்கோ AIEMA டவர், முதலாவது மெயின்ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை–600058, தமிழ்நாடு| கிளை முகவரி: நந்தினி பில்டிங், 3வது தளம், #48, பைபாஸ் சாலை, மதுரை–625010

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டு கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பி எச்எப்எல்)/ கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்– C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது.
நாளது தேதிய திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி9 & (6)8– கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்) மற்றும் கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றும் அதிகாரதாரர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (பிஎன்பிஎச்எப்எல்), கடனீட்டு கடனீந்தோர் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

| கடன் எண்/ கடன்தாரர்/உப–கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A) | கோரப்பட்ட தொகை & நாள் (B) | சுவாதீனம் தன்மை (C) | அடமானச் சொத்துகள் விவரம் (D) | நிர்ணய விலை (RP) (E) | முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் %10) (F) | ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G) | ஏலம் உயர்த்தும் விகிதம் (H) | பார்வையிடும் நாள் & நேரம் (I) | ஏலம் நாள் & நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| HOU/TBM/0821/902588 செல்லமாரி V/ சங்கரம்மாள் C கி.அ.: தாம்பரம் | 14.06.2022 தேதியன்று ரூ.23,86,329.91/– | (கையக) | மனை எண்.5, மனை எண். B, பிளாக் எண்.B, சேகரன் ஐயரிகா சேகரன் நகர், பெரும்பாக்கம், சோழிங்கநல்லூர்–600100 | Rs. 20,79,000/- | Rs. 2,07,900/- | 16.07.2024 | Rs. 10,000/- | 04–07–2024, நேரம்: காலை 10.00 மணி – மாலை 5.00 மணி | 17–07–2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி – பிற்பகல் 2.00 மணி | இல்லை/ அறியப்பட வில்லை |
| HOU/OMR/1217/464816 செந்தில்குமார் L/ அம்சரேகா கி.அ.: ஓஎம்ஆர் | 18–02–2022 தேதியன்று ரூ.23,78,819.23/– | (அடையாள) | அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கொண்ட சொத்து மனை எண்.148 ஒரு பகுதி(கிழக்கு பாகம்), சரவணா நகர், மூன்றாம் கட்டளை கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் சர்வே எண்.1/74a1, பட்டா எண்.401 புதிய பட்டாவின் உப பிரிவு சர்வே எண்.1564 ,9/74 ச.அடியில் அளவீடு பரப்பளவு 782 ச.அடி இத்துடன் இணைந்த கட்டடம் மற்றும் வசதிகள் கொண்டது. நிலத்தின் எல்லைகள்; வடக்கு: சர்வே எண்.85 கால்வாய், தெற்கு: மனை எண்.148 பகுதி, கிழக்கு: மனை எண்.164b, 164c மேற்கு: மீதமுள்ள மனை மற்றும் 6 அடி பொது வழி அளவீடு; கிழக்கில் இருந்து மேற்கு வடக்கு பகுதி: 17 அடி, கிழக்கில் இருந்து மேற்கு தெற்கு பகுதி: 17 அடி, வடக்கில் இருந்து தெற்கு கிழக்கு பகுதி: 48 அடி, வடக்கில் இருந்து தெற்கு மேற்கு பகுதி: 44 அடி, குன்றத்தூர் சார் பதிவு மாவட்டம், சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் உள்ளது. | Rs. 21,59,000/- | Rs. 2,15,900/- | 16.07.2024 | Rs. 10,000/- | 04–07–2024, நேரம்: காலை 10.00 மணி – மாலை 5.00 மணி | 17–07–2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி – பிற்பகல் 2.00 மணி | இல்லை/ அறியப்பட வில்லை |
| NHL/CHE/0123/ 1074984 & HOU/OMR/ 0619/710464 S கீதா /சுவாமிநாதன் J கி.அ: சென்னை | 14–11–2023 தேதியன்று ரூ.19,00,190.42/– | (கையக) | அனைத்து துண்டு மற்றும் பகுதியைக் கொண்ட பிரிக்கப்படாத பங்கைக் கொண்ட நிலம் அளவீடு 204 ச.அடி, சொத்துடன் இணைந்த பிளாட் எண்.f3, முதல் தளம், அளவீடு பரப்பளவு 450 ச.அடி பொது பகுதி உளிட்ட கட்டடம் A & D புரமோட்டர்ஸ் என்ற பெயரில் அறியப்படுகிறது. இது மனை எண். 67, புதிய உப பிரிவு மனை எண்.67–A அளவீடு 1200 ச.அடி அல்லது 11.48 ச.மீட்டர்கள், மனை எண்.–67B அளவீடு 1200 ச.அடி அல்லது 111.48 ச.மீட்டர்கள் அனைத்து மொத்தம் 2400 ச.அடி அல்லது 222.96 ச.மீட்டர்கள், இது சுபாஷ் தெரு, ஸ்ரீ தேவி வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயல், சென்னை600062– என்ற முகவரியில் எண்.16, திருமுல்லைவாயல் கிராமம், ஆவடி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. இது சர்வே எண்.1/698 (ஒரு பகுதி), பட்டா எண். 1319 பட்டாவின் படி புதிய உப பிரிவு சர்வே எண்.698/2a2b, டி.எஸ்.எண்.99/3, வார்டு எண். D, பிளாக் எண்.73, அளவீடு 2400 ச.அடி, உப பிரிவு அங்கீகாரம் Ref.pp.எண்.427/19/F2 தேதி 03.06.2019 ஆவடி முனிசிபாலிட்டி ஆணையால் வழங்கப்பட்டது. இந்த நிலத்தின் எல்லைகள்; வடக்கு: மனை எண்.59 தெற்கு: 20 அடி அகல சாலை கிழக்கு: மனை எண்.66 மேற்கு: மனை எண்.68 அளவீடு கிழக்கில் இருந்து மேற்கு வடக்கு பகுதி: 40 அடி, கிழக்கில் இருந்து மேற்கு தெற்கு பகுதி: 40 அடி, வடக்கில் இருந்து தெற்கு கிழக்கு பகுதி: 60 அடி, வடக்கில் இருந்து தெற்கு மேற்கு பகுதி: 60 அடி இது அம்பத்தூர் சார் பதிவு மாவட்டம், சென்னை வடக்கு பதிவு மாவட்டத்தில் உள்ளது. | Rs. 17,22,000/- | Rs. 1,72,200/- | 16.07.2024 | Rs. 10,000/- | 04–07–2024, நேரம்: காலை 10.00 மணி – மாலை 5.00 மணி | 17–07–2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி – பிற்பகல் 2.00 மணி | இல்லை/ அறியப்பட வில்லை |
| HOU/OMR/0417/382007 காயத்ரி C/S முருகன் கி.அ: ஓ.எம்.ஆர் | 05–03–2018 தேதியன்று ரூ.13,45,350.00/– | (கையக) | அனைத்து துண்டு மற்றும் பகுதியும் கொண்ட மனை எண்.113, அளவீடு 1500 ச.அடி, மனை எண்.114, அளவீடு 1500 ச.அடி (12.5 ச.அடிக்கும் குறைவாக சிதறுண்ட பகுதி) சன் சிட்டி என அறியப்பட்டது. இது DTCP அங்கீகாரம் எண்.07/2017 சர்வே எண்.209/3, 208/1, 208/2 ஐ கொண்டுள்ளது. மதுகர்பாக்கம் கிராமம், கும்மிடிப்பூண்டி தாலுகா, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளது. இந்த நிலத்தின் எல்லைகள்; வடக்கு: மனை எண்.112, தெற்கு: 23 அடி அகல 4வது மெயின்ரோடு கிழக்கு: மனை எண்கள்.115 & 116 மேற்கு: 23 அடி அகல 10 வது குறுக்குத் தெரு. அளவீடுகள்; கிழக்கில் இருந்து மேற்கு தெற்கு பகுதி 50 அடி(5 அடிக்கும் குறைவான சிதறுண்ட பகுதி) வடக்கில் இருந்து தெற்கு கிழக்கு பகுதி: 50 அடி, வடக்கில் இருந்து தெற்கு கிழக்கு பகுதி : 60 அடி, வடக்கில் இருந்து தெற்கு மேற்கு பகுதி: 60 அடி(5 அடிக்கும் குறைவான சிதறுண்ட பகுதி) அனைத்து அளவீடுகள் பரப்பளவு 2987 ச.அடி, இது கும்மிடிப்பூண்டி சார் பதிவு மாவட்டம், சென்னை வடக்கு பதிவு மாவட்டத்தில் உள்ளது. | Rs. 9,32,000/- | Rs. 93,200/- | 16.07.2024 | Rs. 10,000/- | 04–07–2024, நேரம்: காலை 10.00 மணி – மாலை 5.00 மணி | 17–07–2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி – பிற்பகல் 2.00 மணி | இல்லை/ அறியப்பட வில்லை |
| HOU/CHE/0516/284844 சந்திரசேகரன் /C கற்பகவள்ளி கி.அ: சென்னை | 05–02–2018 தேதியன்று ரூ.59,46,979.00/– | (கையக) | அனைத்து துண்டு மற்றும் பகுதி கொண்ட காலி நிலம் மனை எண்.74ல் உள்ளது. லே அவுட் பிளான் (L.a. எண்.57/88, D/3 ,(27.09.1957வது மெயின் ரோடு, குமரன் நகர், அயனாவரம் ஆர்.எஸ்.எண்.15/21, டி.எஸ்.எண்.3, பிளாக் எண்.1, அயனாவரம் கிராமம், முனிசிபல் கார்ப்பரேஷன் டிவிஷன் எண்.43, சென்னை, அளவீடு பரப்பளவு 3150 ச.அடி எல்லைகள்; வடக்கு: ஸ்ரீ ராமநாத ஆல்வடிக்கு சொந்தமான மனை எண்.69 தெற்கு: 40 அடி சாலை(குமரன் நகர் 3வது மெயின்ரோடு) மேற்கு: ஏ.வி.சுப்பா ராவுக்கு சொந்தமான மனை எண்.73, கிழக்கு: மனை எண்.75 இந்த சொத்து அண்ணா நகர் சார் பதிவு மாவட்டம், மத்திய சென்னை பதிவு மாவட்டத்தில் உள்ளது. | Rs. 36,57,000/- | Rs. 3,65,700/- | 16.07.2024 | Rs. 10,000/- | 04–07–2024, நேரம்: காலை 10.00 மணி – மாலை 5.00 மணி | 17–07–2024, நேரம்: பிற்பகல் 01.00 மணி – பிற்பகல் 2.00 மணி | இல்லை/ அறியப்பட வில்லை |

•பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. •• பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்ட வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
1. நாளது தேதிப்படி, நிரல் எண்.K இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு எதுவுமில்லை.
2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பிஎச்எப்எல் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரம் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்–K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம் மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும்.
3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டு கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும்.
4. மனை எண்.68, மூன்றாவது தளம், செக்டார் 44, கூர்கயான், ஹரியானா–122003 இல் கார்ப்பரேட் அலுவலகத்தைக் கொண்டுள்ள M/s C1 இந்தியா பிரைவேட் லிமிடெட் ஆனது மின்–ஏலம் மூலம் விற்பனை நடத்துவதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். இணையதளம் www.bankeauctions.com. சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிக்கு மேலும் அனைத்து பிற விசாரணைக்கு அல்லது பதிவுபெறுவதற்கு, நீங்கள் பிஎன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ நபர் திரு. பாலசுப்ரமணியன் S/ ஜோதிக்கண்ணன் S, பூபதி R/ மருதுபாண்டியன்/செந்தில் குமார்/ கோபிகிருஷ்ணன் R அவர்களை கைபேசி எண்.89517–38505/ 9840487424/ 9731467976/ 8148101608/ 8147170056/ 9840487424/ 9940087598 & மின்னஞ்சல்: auction@pnbhousing.com மூலம் PNBHFL அதிகாரப்பூர்வ நபரை தொடர்பு கொள்ள வேண்டும். அல்லது www.pnbhousing.com காணவும்.

இடம்: தாம்பரம், ஓஎம்ஆர், சென்னை, நாள்:– 01.07.2024 ஒப்/– அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்